UNDELIVERED ISSUES

Please re-address all undelivered issues of the **Morning Star** to:-
**The Manager,**
**"Morning Star",**
**Vaddukoddai.**

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q/J/29/News/85*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 145 JAFFNA, FRIDAY, 11th & 18th OCTOBER, 1985 No. 38 & 39

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

***Subscription***
Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS
***Apply to:***
**The Manager,**
**'Morning Star', Vaddukoddai.**

## Jaffna College Technical Institute

Excerpts from the address of Dr. S. Mohandas at the Tenth Presentation of Diplomas & Certificates at Jaffna College Technical Institute Vaddukoddai.

The Technical education as you are aware is an education designed to promote economic growth through industrial development. If industrialisation is to serve a meaningful step, it must be directed towards the production of goods needed of the average men, primarily. Therefore food production and processing, manufacture of clothing and relevant components and manufacture of coponents for housing should receive priority in the programme of industrial development. Technical education therefore builds up the necessary infra-structure for the meaningful industrialization. More specifically the training you have obtained from this Institution will make you to serve as an Institution of your own so that you will able to provide common services to various industries in the rural areas. For example, if you establish an Engineering workshop at Pallai or Chavakachcheri area, these can be industries developed to extract oil from copra or extraction of fibre from coconut husk or extraction of Fibre from palmyrah. If you establish a carpentry workshop at Kilinochchi, then we could expect furniture and fittings being turned out. The training you obtained therefore results in productive employment and more correctly self-employment. When you discuss about the employment and industries the following facts need to be considered.

***Market***: For self-employment to start with, go for the industries to produce items that are in good demand, essential items that are in use for every-day life, For example production of paddy and processing into rice and flour, production of building materials; production of utensils and garments.

***New Materials***: There are two types of industries as far as raw materials are concerned. They are demand based industries and materials based industries. Industries on Aluminium wares or turning out buckets, examples of the D. B. Industries whereas Kankesan cement industry or Paranthan chemicals corporation examples of M. B. Industries. Every effort should be made to identify industries that are responsive to raw materials that could be produced locally.

What are the raw materials available locally? They are based from Minerals, agriculture, fishing, animal husbandry. As far as minerals are concerned: limestones for cement, B. P. Industries, clay for Brick and tile, cement, ceremics industries and sand for sheet glass and building industries.

As far as agricultural industries are concerned—cash crops for production and processing; Coconut for home consumption, oil, fibre, fire-wood, roofing; Palmyrah for sugar and arrack, pulp, timber and roofing; Fruit orchards for production processing of fruits. As far as animal husbandry is concerned animal production. meat, milk, egg industries. As far as fisheries are concerned — fish catching, processing, fish meal etc.

I have discussed about Marketing and raw materials, two important factors of the developments and the other important resources are; human, machineries and money.

As far as human resources are concerned, effort should be taken to identify industries that are responsive to labour intensive technology, in other words developing countries cannot afford to go for capital intensive technology. There are two types of human resources skilled and unskilled. Shop industry or cement industry requires largely unskilled workers where as carpentry workshop, laths workshop or a fabrication unit requires skilled men... if you want to start grape wine industry, then Atchuvely is an ideal place; palmyrah handi-craft industry at Thikkam; rice mill industry at Kilinochchi, Vavuniya and Manner.

***Machinery***: Machines should be bought or some could be fabricated. All machines cannot be bought from the counter. Some machines should be modified to suit a type of industry you are looking for, for example processing of mango pulp cannot be same as that of palmyrah pulp. Fabrication of simple machines locally to suit the local raw material should be encouraged.

***Finance***: In the last resource I am speaking but the most important one. Under normal situation you can borrow money from the Bank. if the project is viable eccnomically, then there are sponsors such as IDB or DSI. EDB is also financing the industry that is directed for export. Finance Companies too are lending money for industrial projects. Industries are formed of private persons in a loop scheme or under the organisation of L. L. Companies.

During my talk I was stressing to you on the self employment for semi—industrialisation of the rural sector. The training you have obtained need not be the final one. You will be learning more in your own experience. You need further trainings too. You can visit various industries to learn more and more. You are lucky to have this institute with able men within your reach. You can come back to the Institute to clear your doubts and get guidance while you are working You can go to various Govt departments to learn more and get their guidance too.

## Correction

We regret that a printing error has occured in the article on "The National Meeting of the Presbyterian Women of the United States" on Page 7 of our last issue. [20, 29-9-85 & 4-10-85]

In the last paragraph of the article, telating to dramatic events offered at the Festival, "A present of EL Salvador" should read "A *peasant* of EL Salvador". Similarly "a present of Sri Lanka" should read "*a peasant* of Sri Lanka".

The error is regretted.

*For the Record*

## The Cease-Fire Monitoring Board

The following have been appointed as members of Cease—fire Monitoring Board, appointed by the President of the Republic, Mr. J. R. Jayawardne: Messrs. M. A. M. Hussein, J. W. Subasinghe, Ben Fonseka, M. Sivanthan, T. B. Panbokke, Hector Deheragoda. H. Rodrigo, M. M. Abdul Crder. M. R. K. Sivapalan, Prof. K. Sinnathamby and Godfery Gunatilake.

Mr. Felix Dias Abeyasinghe has been elected Secretary to the Committee. The first meeting was held on 16-10-85 at 11 a. m. at the Defence Ministry.

The officials present were Defence Secretary General, Sepala Attyagalla, National Security Secretary, A. Hapudeniya and additional Secretary, Chandra Wickremasinghe.

## Bach's 300th Anniversary

Indian Cellist, *Anup Kumar Biswas*, (born in Chapra, India in 1957) is scheduled to play at the German Cultural Institute in Colombo on Monday, 21st of October to honour Bach's ter centenary.

Anup Biswas has won many awards, including the Suggia Gift for Cello on three successive years and a Countess of Munster Scholarship. He was Exhibitioner at the Royal College of Music where he won a Concerto Prize and gained the ARCM Diploma,

It was Rev. Theordore Mathieson of Oxford Mission Boarding School at Calcutta who discovered his talents. At the age of 16, Biswas made his concerto debut and recorded cello recitals and chamber music for All India Radio and Television.

*Johann Sebastian Bach* (born 1685) whose 300th Anniversary is marked by special performance of the composer's music, all over the world was forgotten soon after his death in 1750. It was almost 80 years later, in 1829 that he regained popularity when composer-conductor Felix Mendelsjohn-Barthholdy resurrected his *St Mathew's Passion* performing it in Berlin.

## Wanted

A Medical Officer for a Mission Hospital in Jaffna to be a resident Medical Superintendent.

Those with administrative experience will be preferred. Salary negotiable.

Please apply to Chairman, Medical Board c/o Jaffna College, Vaddukoddai.

## Uduvil Old Girls Association

**A SPECIAL SERVICE**
at
the Uduvil Church
on
Sunday, November 3rd, 1985
at
8.30 a. m.

***Theme***:
**"The Unveiling of the Cross"**
All are invited.

## The 38th Annual Festival
of
**CAROL SINGING**
by
**The Youth of the North**
at
**St. John's College, Jaffna**
on
**Monday 11th November 1985**
**at 9.30 a. m.**
***Please inform others.***
Admission by Programme.

St. John's College,
Jaffna.

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY
OF
**J. E Soundrarajah**
called to rest
16th October 1981.

"***Return unto thy rest,***
***O my Soul;***
***for the Lord hath dealt***
***bountifully with thee.***"
Ps: 116: 7.

Fondly remembered by his wife, children and his loved ones.

5, Power House Lane 2,
Jaffna.

*IN BRIEF*

- ***Tamil Book on Indra Gandhi***: ***Annai Indira*** (Mother Indira) is a title of a book written by Anthony Jeeva. The book was released at a formal ceremony at the Rochedale Hall, Kandy recently at which Dr. V. P. Sharma, Assistant High Commissioner for India was the Chief Guest. Mr. S. Nadarajah Principal, Asoka Vidyalaya presided.

## For a Just Peace

Delegates from all parts of Sri Lanka about 150 in number representing almost all the Christian Churches in the country including the Roman Catholic Church met in Ampitiya from 5th — 10th August 1985. This statement was passed with the unanimous approval of all members of the Assembly. It is offered as a contribution towards the solution of the ethnic question in our country by those who were present at the Ampitiya meeting and does not claim to represent the views of the official leadership of the Churches.

The Theme of our Conference was 'Jesus Christ the life of the world". It is from Jesus Chirst, the God man that all life energy flows. He is the God of Life, the Living God. He yet emptied himself of all prerogatives, became man and took upon himself our human condition of ignorance and enslavement to share with us our frailties, sorrows and suffering. Finally he laid down his life that we may have life. It is he who heals our infiirmities and shares with us his true everlasting life.

In an atmosphere of prayerful reflection we listened to one another and tried to understand the aspirations, fears and sufferings of the various communities in our country. We are deeply distressed by the sad turn of events in our country leading to large scale violence, brutalization of human life and virtual civil war.

Despits this tragic situation we are all convinced that persons of all ethnic groups in the country can yet live in justice and peace in a united Sri Lanka provided that we understand one another's points of view and respect the human dignity of each person and of each community.

To achieve this end this conference urges the following:-

1. Our differences must be resolved by continuing and sustained dialogue and there must be no more resort to violence. Armed conflict will not only bring death and suffering to many more but also destroy our economy and endanger our freedom and independence in a world of super power rivalries The increasing militarisation of our country and the fact that violence is becoming institutionalized, causes us grave concern A whole generation of young people is growing up in our midst with a psychology of hatred and resentment.

2. All political parties and groups in our country must transcend their party differences and narrow communal loyalties and work together for a peaceful and free united Sri Lanka This can open the way for a lasting settlement acceptable to all communities and political parties We urge that all political parties be enabled to function again under normal conditions and that the civil rights of those active in politics should be restored

3 If our country is to remain one we must all accept one another as equal citizens and ensure equal rights for all in education employment and language use. Every citizen of our country should be free to practise his own religion.

4 Our people will feel that they belong to a united Sri Lanka only if democratic processes and human rights are carefully safeguarded, fundamental rights guaranteed and power and responsibility are jointly shared with the people at all levels.

5 Anger, bitterness and the desire for revenge must give way in the hearts of all to a desire to forgive and be for given. We must put the immediate and painful past behind us and move to a new future in which the security and dignity of all will be ensured.

6. The authorities responsible for the dissemination of information and the mass media must present the points of view of all communities truthfully and impartially so that they may gain credibility among the people of our country.

7. Within a united Sri Lanka power should be devolved to provincial units with the possibility of inter-provincial collaboration on common concerns which affect two or more provinces within the framework of overall national policy, so that the rights of minorities, their linguistic and cultural traditions may be preserved.

Such a measure far from leading to a division of the country is the best way to ensure the preservation of its unity. There can be no solution of our problem without mutual trust, respect and good-will

8. In the issue of land use and settlement of people in the Northern and Eastern Provinces the broad principles of the Bandaranaike-Chelvanayagam pact (1957) and the Dudley Senanayake-Chelvanayagam pact (1965) provide useful guide lines.

9 We understand the reluctance of the Tamil community to be satisfied now only with promises, pledges, negotiated settlements and even legislative enactments. Significant measures that will end the just grievances of the Tamil community must be implemented immediately as an earnest of our sincere desire to end the conflict.

10 Persons of Indian origin on the plantations who were disenfranchised in 1949 and their descendants, who opt to make Sri Lanka their home should be granted rights of citizenship We ask that the repatriation of Indian Tamils back to India against their wish be reconsidered.

11. We suggest the appointment of judicial commissions to supervise the implementation of negotiated settlements and to deal with violations of human rights, discrimination on ethnic or other grounds and inciting communal feelings

12. We perceive our present situation to be dangerously volatile. We welcome the negotiations at Thimpu and urge the negotiating parties to reach agreement immediately on overall principles while leaving doors open for further dialogue on matters of detail. We consider it important that there should be a dialogue among all sections of our people, so that they may understand the issues and opt for peace.

13. We urge that an amnesty be granted to those who have engaged themselves in unlawful acts of violence and that all displaced ethnic groups be resettled with adequate safeguards for their life and property.

In the spirit of these recommendations we as a Conference resolve to work together with others in every way open to us towards reconciliation, justice and peace, and we pledge to serve a united Sri Lanka with devotion, loyalty and self sacrifice.

Rev. K. M. J. Fernando
Co.Convenor
on behalf of the Ecumenical
Church Conference 1985.

## The National Meeting of the United Presbyterian Women of United States

*(Continued from our last issue)*

The workshops could be attended by those who had tickets for them. They were so popular and accmmodation was limited. There were exploration workshops which were learning events, programming workshops which were "learn by doing" events and searcher ones where one had to attend the same workshops on three consecutive afternoons.

And so the variety of options offered was great and made the choice difficult. Most of us could not attend the events that we would have liked to, as there were too many good things going on at the same time.

The sister country events were in the form of group meetings, with delegates from several neighbouring States having come prepared to listen to an international participant talk about her country, giving them a message from the people of her country, These group meetings were not only edcational but brought people into closer fellowship, stimulating the interests of the American Presbyterians in countries alien to them.

Then there were the evenings on the Mall (A Walk). One evening was for the international participants, another for the Officers of the U. P. W., one for Missionaries and fraternal workers and one for the men who were attending the Meeting. There was in addition music, short skits, clown and puppet shows. These evenings provided us with more time to talk to one another and get to know people in the midst of what seemed a tight schedule.

The Theme of the National Meeting was the "Visible Sign". The Bible studies and guest speakers dealt with the theme. They emphasised that we live in world of incredible brokenness in international relationships, treaties and laws; also of broken people-in the unemployed exploited, hungry and oppressed tortured rich and heart broken. In the midst of this brokenness and seperation there's the connectedness that can give hope. Together in God's name we can begin to mend the brokenness, share in God's world loving work, and empower the human family to live in peace. And so we "become bread from the hand of God for the world". And so the organisers went to all the trouble and expense of bringing the international delegates from various parts of the world specially where there's strife and tension and oppression so that their own members could become familiar with the problems of their fellow sisters and may bring about 'oneness in brokenness' The U. P. W. was very concerned with not only their peoples' problems, e.g. we were given the opportunity to hear the story of Mrs Weir and her unheard appeals for the release of her husband - a missionary who is in captivity in the Middle East. He is being held as a hostage along with 6 others by one family, but also about what was happening in, to mention a few countries, South Africa, Sri Lanka, West Bank and Central America.

The first mornings proceedings in the Hall of Music was a memorable one for me as I with the delegates from Switzerland and West Bank-Jordon and a native American (Indian) were on the stage with "A Message from the Women of my People".

The closing service was another memorable event when Robert Mueller of United Nations spoke The Lord's Supper was celebrated at the end of the service with Passing of the Peace as in the C.S.I. tradition. Three women Priests from Kenya, Japan and Spain (now living in U.S.) were the Celebrants. The communion bread was baked by Women of the Presbyterian Church in Virginia.

For many I am sure the U. P W. National Meeting must have been a bit overwhelming as it was to me. First of all the numbers were huge, compared with the groups in which we participate

(Continued on page 7)

# உதயதாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 145 ] 11, 18-10-1985 [ இதழ் 38, 39

## உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?

நீங்கள் உங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறீர்கள்? பிள்ளைகளின் விருப்பத்தை அறிந்து அந்த வழியில் அவர்களை நடத்துகிறீர்களா? அல்லது உங்கள் விருப்பப்படி அவர்களை வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

பெற்றோர் அனைவருமே தங்கள் பிள்ளைகள், வாழ்க்கையில் வெற்றியடைந்து முன்னேற வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நமது நோக்கங்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டதாய் இருக்கிறது. அதாவது, கடவுளின் சித்தப்படிதான் நம்முடைய பிள்ளைகளின் வெற்றி அமையவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். அதற்கேற்க பிள்ளைகளைத் தொடக்கத்திலேயே சரியான வழியில் பெற்றோர் ஊக்குவித்தால், பிற்காலத்தில் அவர்கள் வாழ்க்கைக்கு உதவியாயிருக்கும்.

பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கைக்காகத் தேர்ந்தெடுக்கும் தொழில் அவர்களின் விருப்பப்படி அமைவது தான் நல்லது. பிள்ளைகளின் ஆற்றலை அறிந்து, அதற்குரிய வழியில் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது பெற்றோர் கடமையாகும். பிள்ளைகள் அனைவர்க்கும் அவரவர்க்கென்று தனிப்பட்ட திறமைகள் உண்டு. அதைப் புரிந்து கொண்டு, அவர்களின் நோக்கங்களுக்கும், விருப்பங்களுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும்; தங்கள் விருப்பங்களையும், தொழிலையும் தங்கள் பிள்ளைகளும் மேற்கொள்ள வேண்டும் என எண்ணுவது தவறு. பெற்றோர் தங்கள் இளம் பருவத்தில் நிறைவேறாத ஆசைகளை, பிள்ளைகளின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள நினைத்தல் கூடாது.

தங்கள் வாழ்க்கைக்காகப் பிள்ளைகள் ஏதாவதொரு தொழிலைத் தேர்ந்தெடுக்குமுன், பல்வேறுபட்ட தொழில்களைப்பற்றிப் பெற்றோர் அவர்களுடன் விவாதிப்பது நல்லது. பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி நாம் எடுக்கும் தீர்மானத்தில், தொடக்கத்திலிருந்து இறுதி வரை உறுதியாக இருக்கவேண்டும், சிறுவயதிலிருந்து, ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும். பலவகைப்பட்ட தொழில்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, அதில் பயிற்சி பெற்றவர்களின் உதவியுடன் வழிகாட்ட வேண்டியது அவசியம். பிள்ளைகள் சிறிது வளர்ந்ததும், அவர்களுக்கென்று சில ஓய்வு நேரத் தொழில்களைக் கற்றுக் கொடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

சில பெற்றோர், தங்கள் பிள்ளைகள் கடவுள் ஊழியம் செய்ய வேண்டுமென விரும்புவதுண்டு. அப்படி விரும்பும் பெற்றோர், தம்பிள்ளைகளைக் கட்டாயப் படுத்தாமல் ஊக்கமான செபத்தினாலும், கிறிஸ்தவ சூழ்நிலையில் வளர்ப்பதாலும், அவர்களை ஊழியத்திற்கென்று ஆயத்தப் படுத்த வேண்டும். நம் விருப்பப்படியல்ல, எதுவும் கடவுளின் சித்தப்படிதான் நடக்கும் என்பதை பிள்ளைகள் உணரும்படி செய்யவேண்டும் கடவுளின் ஊழியரை அடிக்கடி வீட்டிற்கு வரவழைத்துப் பேசுவதன் மூலம், தேவ ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறமுடியும்.

ஊழியர்களின் பிரசங்கத்தைப்பற்றிப் பிள்ளைகள் முன்பு குறைகூறுவதும், கேலியாகப் பேசுவதும் கூடாது. பிள்ளைகள் தங்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கென்று தேர்ந்தெடுக்கும் எந்தத் தொழிலுக்கும், கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தொடங்கும்படியான எண்ணத்தை அவர்களிடம், உண்டாக்கவேண்டியது அவசியம்,

தனித்து நின்று வாழக்கூடிய திடமானதையும், தன் நம்பிக்கையையும் பிள்ளைகளிடம் ஏற்படுத்த வேண்டும் இதனால், பிற்காலத்தில் வாழ்க்கையில் எவ்விதச் சோதனைகள், கஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவர்களால் அவற்றைச் சமாளிக்க முடியும் கடவுளின் ஊழியத்திற்கென்று அனுப்ப நினைக்கும் பிள்ளைகளுக்கு அவர்களின் படிப்புக்குத் தேவையான அன்றாட செய்திகளை சேகரித்துக் கொடுத்து உதவ வேண்டும்.

பிள்ளைகள் தங்களுடைய பிற்கால வாழ்க்கையில் வெற்றி கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சியில், அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, நல் வழியில் நடத்திச்செல்ல பெற்றோர் முயல வேண்டும்.

— எம் ஸி,

## அஞ்சவேண்டாம்!

சீயோனே, அஞ்சவேண்டாம்;  
உன் கைகள் சோர்வடைய வேண்டாம்.  
உன் கடவுளாகிய ஆண்டவர், உன் நடுவில் இருக்கிறார்;  
அவர் மாவீரர்; மீட்பளிப்பவர்;  
உன் பொருட்டு அவர் மகிழ்ந்து களிகூருவார்;  
தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார்.

— செப்பனியா 3:16, 17.

## இருபத்தோராம் நூற்றாண்டை எதிர்நோக்கி....

எஸ். ஜெபநேசன்

**5-10-1985 அன்று நடைபெற்ற அத்தியட்சாதீன விழாவில் ஆற்றிய உரையின் சாரம்.**

2000ம் ஆண்டு உதயமாவதற்கு இன்னும் பதினைந்து வருடங்கள் இருக்கின்றன. சைவர்கள் கடிதம் எழுதமுன்பும் விஞைத்தாள்கள் எழுதமுன்பும் பிள்ளையார் சுழி போடுவர் சிவமயம் என்று எழுதுவர். கிறிஸ்தவர்கள் 5-10-85 என்று எழுதும்பொழுதே கடவுள் வணக்கம் செய்கின்றனர். நமதாண்டவராகிய இயேசுவின் வருடம் 1985 என்று கூறுகின்றனர். 1985 A. D. என்பது Anno Domini எமதாண்டவரின் வருடம் என்பது பொருள். எனவே 2000ம் ஆண்டு கிறிஸ்தவர்களினாலே கொண்டாடப்படுவது அவசியமானதாகும்.

இப்பொழுது நாம் மின்னல் வேகத்திலே மாற்றங்கள் நடைபெற்று வரும் காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். மின்னல் வேகத்தில் எப்பொழுதுமே மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்று சிலர் கூறுவர். ஆதாவும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டபொழுது, ஆதாம் ஏவாளை நோக்கி "நாம் இப்பொழுது மாறுதலடைந்து வரும் காலகட்டத்தில் (Age of Transition) வாழ்ந்து வருகின்றோம் என்று கூறியதாக ஒரு கதையுண்டு.

ஆனால் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முன்னொருபொழுதும் இல்லாதவாறு மாற்றங்கள் நடைபெற்றுவருகின்றன வென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். 1969ம் ஆண்டிலே பங்கர் நினைவுச் சொற்பொழிவை ஆற்றிய டாக்டர் சாய்டீன் (Saideen) இப்பொழுது மாற்றங்கள் துரித கெதியில் நடைபெற்று வருவதனால் 1930ம் ஆண்டினை 40 வருடங்களுக்கு முந்திய காலம் என்று கொள்ளமுடியாது. அது நூறு வருடங்களுக்கு முற்பட்ட காலம் என்றார். இந்த நோக்கில் நாம் 2000ம் ஆண்டினை நாம் பதினைந்து வருட மாற்றங்களின் பின் வரும் ஆண்டு என்று கொள்ளாமல் நூறுவருட மாற்றங்களின் பின் வரும் ஆண்டு என்றே கொள்ளவேண்டும்.

கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது; இதனை ஆராய்ந்து அறிய ஜப்பான் முதலிய நாடுகளில் வருங்காலவியல் (Futurology) என்ற ஒரு பாடமே பயிலப்பட்டு வருகின்றது. நமக்கு அதனைப் படிக்கும் வாய்ப்பில்லை. ஆனால் நமது பண்டைய இலக்கியங்கள் ஒரு உண்மையைத் திரும்பத்திரும்பக் கூறுகின்றன. அதாவது இன்ப துன்பம் வண்டிற் சில்லுபோல கீழது மேலாயும் மேலது கீழாயும் மாறிமாறிவரும் இன்று அரசியல் துன்பங்கள் நம்மை வாட்டி வருகின்றனவென்றால் விடிவு சமீபத்திலே உண்டு என்பதுதான் பொருள்,

"தமிழா கடவுளை நம்பு  
உனக்கு நல்லகாலம் வருகின்றது"

என்று சுப்பிரமணிய பாரதியார் இறப்பதற்கு முன்னர் எழுதி வைத்தார். அதனை நாம் இன்று நினைவுகூருவோமாக.

### அமெரிக்கன் மிஷனரிமார் வருகை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற் காலடி எடுத்து வைத்தனர், 1991-ம் ஆண்டு அவர்களின் வருகையின் 175வது வருடத்தைக் கொண்டாடப் போகிறோம். இந்த வருடம் அமெரிக்கன் மிஷனரி சங்கத்தின் (UCBWM) 175வது நிறைவு விழா கொண்டாடப்படுகின்றது, ஏனெனில் 1810ம் ஆண்டிலேதான் இந்த மகாசபை அமெரிக்காவில் அமைக்கப்பட்டது, அது அமைக்கப்பட்டு ஆறு வருடங்களின் பின்னர் அமெரிக்கன் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அமெரிக்கன் மிஷனரிமாரின் வருகை யாழ்ப்பாணத்திற்கேற்பட்ட மிகச் சிறந்த நிகழ்வுகளில் ஒன்று என்பதனை எவருமே மறுக்க மாட்டார்கள். அவர்கள் ஆற்றிய சுவிசேடப்பணி, கல்விப்பணி, வைத்தியப்பணி, அச்சுப்பணி, சமுதாய சீர்திருத்தப்பணி, என்பன மறக்கமுடியாதவை. யாழ். குடாநாட்டை உலகிலேயே மிகச் சிறந்த கல்விமான்களை உருவாக்கும் பிரதேசமாக்கின C. H. பியரத்தினு என்னும் வரலாறு ஆசிரியர், யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கன் மிஷனரிமாரின் மனைவிமாரே உலகில் முதன்முதலாக ஆசியப் பெண்களுக்குக் கல்வி புகட்ட முன்வந்த வெள்ளைக்கார மாதர் என்று குறிப்பிடுகின்றார். ஹரியட் வின்சிலோ சாரா மெக்ஸ், ஆன் புவர் நான்சி ஹொய்சிங்டன் மேரி ஸ்போல்டில் ஆகியோரே யாழ்ப்பாணப் பெண்களின் உயர் நிலைக்குக் காரணம்.

### புதிய நூற்றாண்டில் நமது ஆதீனம்

புதிய நூற்றாண்டில் நமது ஆதீனம் எண்ணற்ற வாய்ப்புக்களைக் கொண்டு விளங்குகின்றது. அமெரிக்கன் மிஷனரிமார் இரத்தத்தோடும் கண்ணீரோடும் உருகிய திருச்சபை மெள்ள மெள்ள பிறநாடுகளை நோக்கி நகர்கின்றதென்பது மறைக்க முடியாத உண்மையாகும். ஆனால் அதன் இடத்தில் புதிய ஒரு திருச்சபை மலர்கின்றது என்பதனை நாம் காணமுடிகின்றது. செட்டிகுளம், வவுனியா, கிளிநொச்சி வன்னேரிக்குளம், முறிகண்டி ஆகிய இடங்களில் துளிர்விட்டிருக்கும் புதிய சபைகள் இதற்குச்சான்று பகர்கின்றன. இப்புதிய சபை விரைவில் ஆல்போற் பருத்து அறுகுபோல் படர்ந்து விடுமென நம்பலாம் இருபத்தோராம் நூற்றாண்டிலே நமது சபை சில திட்டவட்டமான பண்புகளைக் கொண்டு விளங்கும்,

(அ) தொடர்ச் சாதனமாக விளங்கும் பிறநாட்டார் நமது நாட்டாருடன் தொடர்பு கொள்ளவும் நமது நாட்டார் பிறநாட்டவருடன் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பளிக்கும்.

(ஆ) விநியோகம் செய்யும் சபை Distributing Church பிறநாட்டு உதவிகளை சொந்த நாட்டாருக்குப் பகிர்ந்தளிக்கும் சபை.

(இ) சொந்த நாட்டுக் கலாச்சாரத்தில் ஊறிய சபை அதாவது சொந்தமான வாசனையுள்ள சபை.

(ஈ) சுதேச இறையியலை வளர்த்துக்கொள்ளும் சபை.

(உ) கல்விமான்களைக் கொண்ட சபை,

இச்சூழலில் எண்ணரிய வேலை வாய்ப்புக்களையும் உயர்கல்வி ஸ்தாபனங்களையும் உருவாக்குவது திருச்சபையின் கடமை T. T. S., M. C. C., C. L. S. போன்ற ஸ்தாபனங்கள் மலர வேண்டிய சபை. அந்த நன்னாளை நோக்கித் திருச்சபை நகரட்டும்.

## திருமணம்

### லக்ஷ்மன் — மல்லிகா

யாழ். கல்லூரி அதிபர் திரு. & திருமதி A. கதிர்காமர் அவர்களின் மகள் மல்லிகாவிற்கும், காலஞ்சென்ற திரு விக்டர் இராசரத்னம் அவர்களினதும், திருமதி M. இராசரத்னம் அவர்களினதும் மகன் லக்ஷ்மனுக்கும் இம்மாதம் 12ஆம் நாள், சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு, வட்டுக்கோட்டை திருக்கோவிலில், பேராயர் அருள்மிகு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் தலைமையில், அருள்திரு. T. S. பிரேமராசா, அருள்திரு. S. K. கதிர்காமர் ஆகியோரின் உதவியுடன் நடைபெற்றது. இலங்கை மெதடிஸ்த சபை வடக்கு கிழக்கு மகாணச் சபைகளின் தலைவர் அருள்திரு. H. R. S. ஜெயசந்திரன் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார். திரு. தேவ் ஆனந்தராஜன் சிறப்புப் பாடல் பாடினார். சபைப் பாடகரும் சிறப்புப் பாடல் பாடினர். ஆராதனை முழுவதும் தூய தமிழில் நடத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. சமுகமளித்த அனைவர்க்கும் விருந்துபசாரம் நடைபெற்றது.

## தியானம்

### "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே........மாதிரிகளானீர்கள்

— தெ 1: 6, 7.

திபெத் நாட்டில் என் நண்பனொருவன் கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்துக்கொண்டிருந்தான், இச் செய்கையினால், அங்கிருந்த புத்தமத குருவின் பகையை வருவித்துக் கொள்வாயென்று பலர் அவனை எச்சரித்தனர். 'நற்செய்தியைப் பிரசங்கிக்காமல் என்னால் அமைதியாய் இருக்கமுடியாது. கிறிஸ்து எனக்குச் செய்த நன்மைகளை, பிறருக்கு அறிவித்தே தீரவேண்டும்' என்று விடையளித்தான் என் நண்பன்,

அங்கிருந்த புத்த மதத்தினர், என் நண்பனை அடித்துத் துன்புறுத்தினர்; கால்களைக் கயிறுகளால் கட்டி, ஒரு மரக்கிளையில் தலைகீழாகத் தொங்க விட்டனர். தலைகீழாகத் தொங்கியதால் அவன் மிக்க துன்பத்தையடைந்திருக்கக் கூடும், ஆனால் தான் இத்துன்பங்களினூடாகப் பரலோகத்தின் இன்பங்களை அனுபவிப்பதாகப் பார்த்தான். கிறிஸ்துவுக்காகத் தான் துன்பப்படுவதில் மகிழ்ந்தான். அதுமட்டுமல்ல, என்னைத் தலைகீழாகத் தொங்கச் செய்திருப்பது உங்கள் இயற்கையின் பிரதிபலிப்பே தவிர வேறல்ல, உலகமே தலைகீழாக இருப்பதால் உங்கள் செயலும் அவ்வாறே இருக்கிறது. தலைகீழான உலகத்தால் எதையும் நேராகக் காணமுடிவதில்லை. நேர்மையான செய்தியும் உங்களுக்குப் புரிவதில்லை,

திரைப்பட இயந்திரத்தில் பொருத்தப்படும் படத்துண்டுகள் தலைகீழாக இருந்தாலும், திரையில் நேராகத் தோற்றுவதுபோல் நான் சகலத்தையும் நேராகக் காண்கிறேன். உலக இயந்திரத்தில் தலைகீழாக இருந்தாலும் பரலோகத் திரையில் நேர் முறையிலிருப்பேன். இவ்வாறிருப்பதற்கு இறைவனுக்கு நன்றியும் செலுத்துகிறேன் என்றுகூறினார். இவ்வாறு கூறியவன்தான் மெய்யாகவே கடவுளுடைய அரசுக்குள் இருப்பதைச் செயல் முறையில் நிரூபித்துவிட்டான்,

— சாது சுந்தர் சிங்

## போதகரின் குறிப்பேடு

### புலனடக்கம் தேவை!

திருமந்திரம் என்னும் நூலில் அதன் ஆசிரியர் திருமூலர், பின்வரும் பாடலின் மூலம் உணர்த்தும் அருமையான கருத்தைக் கவனியுங்கள்.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு
ஐந்துண்டு;
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத்
திரிவன,
மேய்ப்பாரும் உண்டாய், வெறியும்
அடங்கினல்;
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச்
சொரியுமே!"

இப்பாடலின் விளக்கத்தைக் கவனியுங்கள்,

ஒரு தலைவனிடம் ஐந்து பசுக்கள் இருந்தன, அவை பெறுமதி உள்ளவை; கிடைப்பதற்கு அரியன, ஆனால் தலைவனோ அவற்றின் பெறுமதியை உணரவில்லை, ஏற்றவாறு கவனிக்கவில்லை. அதனால் அவை வீட்டில் இராது, பாலும் கொடாது வீதிகளில் திரிந்து குப்பை மேடுகளில் அலைந்து கண்டனவற்றைத் தின்று, சாக்கடை நீரைப் பருகும்.

இதைக் கவனித்த மாட்டு மேய்ப்பன் ஒருவன், தலைவனிடம் வந்து, 'ஐயா, நீர் வைத்திருக்கும் பசுக்கள் மிக்க பெறுமதியுடையன. அவற்றை வீட்டில் கட்டி வைத்துப் புல்லும் பிண்ணாக்கும் பருத்தியும் தவிடும் கொடுத்து, நாள்தோறும் குளிப்பாட்டிச் சிறிது நேரம் நடமாட விட்டுப் பாதுகாத்துப் பேணி வந்தால், குடம் குடமாகப் பால் கறக்கும்! அவற்றைச் சரியாகக் கவனியாமல் வெறிபிடித்தவைபோல வீணாக ஏன் அலையவிடுகிறீர்கள்? என அறிவுறுத்தினன்.

மாட்டு மேய்ப்பனின் அறிவுரையைக் கேட்டு, அதன்படி தன மாடுகளைத் தலைவன் கரிசனையுடன் கவனித்துப் பெரும் பயனை அடைந்தான்.

இந்தத் தலைவன் யார் தெரியுமா? நீ தான்! பசுக்கள் ஐந்தும் உனது—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களே. இவை பெரு மதிப்புக்குரியவை. இறைவனால் உனக்கு அளிக்கப்பட்டவை. இவற்றைச் சரியாகப் பேணிப் பாதுகாத்துக் கட்டுப்படுத்தி வைத்தால், பெரும் பயனடைவாய், அவ்வாறு செய்யாமல் கண்டபடி அலைய விட்டால் அவை முரட்டுத்தனமாக, வெறி கொண்டு வீணாகும். இது அருளாளர் கண்ட பேருண்மை, இந்தப் பேருண்மையை ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆழமாகச் சிந்திப்பது நல்லது.

[தந்துதவியவர் D. R. A.]

[இப்பகுதியில் தமிழ் இலக்கியத்திலிருந்தும், சைவசமயத் திருநூல்களிலிருந்தும் அரும் பெருங் கருத்துக்கள் கிறிஸ்தவ ஊழியர் சிந்தனைக்காகத் தரப்படும்.]

— ஆ. ர்.

## உங்களுக்குத் தெரியுமா?

● உலகத்திலேயே மிகவும் ஏழ்மையான மக்கள் பிலிப்பைன்ஸில் மின்டானோ தீவுக் காட்டிலுள்ள தாசடே பழங்குடிகளாவர், 1971இல் தான் இவர்கள் இருப்பதே கண்டுபிடிக்கப்பட்டது இவர்கள், வீட்டுப் பிராணிகள், விவசாயம், மண்பாண்டங்கள், ஆடைகள் எதுவுமே இல்லாமல் வாழ்ந்து வந்தார்கள்.

● உலகத்திலேயே மிக அதிகமான தொகையைத் தர்மமாக வழங்கிய வள்ளல், ஜான் டேவிட்சன் ரொக்பெல்லர் (1839–1937) ஆவார். இவர், தான் சாகும் வரை 750 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களைத் தானமாக வழங்கியுள்ளார்,

● அமெரிக்காவைச் சேர்ந்த ஆண்ட்ரு கார்னஹி என்பவர் 7689 ஆலய வீணைகளையும் (ஆர்கன்கள்) 2811 நூல் நிலையங்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளார். இவர், தம் வாழ்க்கையின் துவக்க காலத்தில் வாரத்திற்கு பன்னிரண்டு ரூபாய் ஊதியத்தில் தனது பணியைத் துவங்கினார்,

● உலகத்திலேயே மிகவும் பணக்காரப் பெண்மணி நாசாவைச் சேர்ந்த இளவரசி வில்ஹெல்மினா ஹெலீனாபாலின் மரியா என்ற பெண்மணியாவார். இவர் 1962இல் இறக்கும்போது இவருடைய சொத்தின் மதிப்பு 550 கோடி ரூபாயாகும்.

● உலகத்திலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த பரிசு 1972ஆம் ஆண்டு துவங்கப்பட்ட டெம்பிள்டன் பவுண்டேஷன் பரிசாகும். இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் எம் டெம்பிள்டன் என்பவரால் இந்நிதி நிறுவப்பட்டது ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும் இந்தப் பரிசின் மதிப்பு 20 இலட்சம் ரூபாயாகும். இப்பரிசு சமய மலர்ச்சிக்காக ஒருவர் ஆற்றும் பணிக்காக அவருக்கு அளிக்கப்படுகிறது.

● உலகத்திலேயே மிக அதிகமாக நோபெல் பரிசுகளைப் பெற்ற நாடு அமெரிக்கா இதுவரை இந்த நாட்டுக்கு 152 நோபெல் பரிசுகள் கிடைத்துள்ளன,

## யாழ். மறை மாவட்டம் 38ஆம் ஆண்டு விழா

யாழ். மறை மாவட்டத்தின் 38ஆம் ஆண்டு விழா, இம்மாதம் 5ஆம் நாள், காலை 8-30 மணியளவில், வட்டுக்கோட்டை திருக்கோவிலில் கொண்டாடப்பட்டது.

பேராயர் அருள்மிகு. டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் அன்று காலை 8-30 மணிக்கு நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு நடத்தப்பட்டது. அருள்திரு. T. S. பிரேமராசா அருளுரை வழங்கினார். அருள்திரு S. மனோபவன் மன்றாட்டு செபத்தை நடத்தினார். வேதப்பாடங்கள், திரு. K. A. சின்னத்தம்பி, செல்வி C. V. செல்லையா, அருள்திரு. M. தேவதாசன் ஆகியோரால் வாசிக்கப்பட்டது.

இதன்பின், காலை 10-45 மணியளவில் அனைவர்க்கும் தேநீர், சிற்றுண்டி ஆகிய வழங்கப்பட்டன. காலை 11-30 மணியளவில், யாழ். கல்லூரி ஒட்லி மண்டபத்தில், கலைநிகழ்ச்சி உடுவில் மகளிர் கல்லூரியினால் சிறப்பாக நடத்தப்பட்டது.

நண்பகல் 12-30 மணியளவில் பேராயர் அம்பலவாணர் அவர்களின் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் (திருமதி) C. அம்பலவாணர் பெண்கள் நடுவில் செய்யப்படும் ஊழியத்தைப் பற்றியும், அமெரிக்க பிறஸ்பித்தேரியன் சபைப் பெண்கள் ஒன்றியம் செய்து வரும் நற்பணிகளைப் பற்றியும் விபரமாகக் கூறி, நமது சபைப் பெண்கள் திருச்சபையில் செய்ய வேண்டிய வேண்டிய கடமைகளைப் பற்றி விளக்கமாகக் கூறினார். அடுத்து அருள்திரு. C. T. ரொபேட்ஸ், இளைஞர் மத்தியில் செய்யப்படும் ஊழியத்தைப் பற்றியும், இளைஞர் ஆண்டாகக் கணிக்கப்பட்ட இவ்வாண்டில், உலகின் பல்வேறு இடங்களில் நடைபெற்றுவரும் சிறப்பான பணிகளைப் பற்றியும் விவரமாகக் கூறினார். யாழ். கல்லூரி ஆசிரியர் திரு. S. ஜெபநேசன் தமது உரையில், இப்போ நம்மைச் சுற்றி நடைபெறும் சம்பவங்களைக் கவனிக்கும்போது. ஒரு புதிய சபை உருவாகிக் கொண்டு வருகிறதை நாம் காணலாம். 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நமது சபைகளின் பழையன கழிந்து புதியன தோன்றும். இதற்காக நாமும் இறையுதவியுடன் அயராது, சோராது, அச்சமின்றி உழைக்க வேண்டுமெனக் கூறி முடித்தார். இக் கூட்ட தொடக்கத்தில், கண்ணுசாமி ஆச்சிர பிரதம சேவக் வண. சாம் அக்பிறட் வேதப்பாடம் வாசித்து செபம் செய்தார். பேராயரின் ஆசீர்வாதத்துடன் விழா முடிவுற்றது. அனைவரும் நண்பகல் விருந்தில் கலந்து மகிழ்ந்து போயினர்.

## யாழ். மறுமலர்ச்சி மன்றம்

### காந்தியடிகளின் பிறந்த நாள் விழா

யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினால், இம்மாதம் 2ஆம் நாள் (2-10-85) மாலை 4-00 மணிக்கு, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் காந்தியடிகளாரின் பிறந்த நாள் விழா மன்றத் தலைவர் திரு. S. செல்வரத்னம் அவர்கள் தலைமையில் விமரிசையாக நடத்தப்பட்டது.

இம் மன்றத்தின் செயலாளர் திரு. செ. யோ. செல்வராசா, அனைவரையும் வரவேற்று உபசரித்தார். இசைக் குழுவினர் காந்தி அஞ்சலி செய்து இனிய பாடல்களைப் பாடினர். சிறுவர் பேச்சு சிறப்பாக நடந்தேறியது மானிப்பாய்ச் சபைக் குருவானவர் அருள்திரு. டீ. ஆர். அம்பலவாணர், திருகோணமலையைச் சேர்ந்த திரு S. கந்தையா (காந்தி மாஸ்டர்) சிறப்புச் சொற்பொழிவுகளை வழங்கினர். வண. அம்பலவாணர் அவர்கள், காந்தியடிகளின் பணிகளைப் பற்றிப் பேசும்போது, காந்தியடிகள் இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகிற்கே பெருந்தொண்டாற்றியுள்ளார். அவர் கூறிய போதனைகளை—

(1) உண்மை உயர்வு அளிக்கும் (2) பாடுபட்டு உழைத்து பகிர்ந்து வாழ் (3) அனைவர் மேலும் (எதிரிகள் உட்பட) அன்பு செலுத்து—என்ற முப்பிரிவுகளில் அடக்கி கவனிப்பது நல்லது என்று கூறினார். தலைவர் திரு செல்வரத்னம் அவர்களின் நன்றியுரையுடன், மன்றப் பாடல் பாடி, இவ்விழா இனிது முடிவுற்றது.

## இறைவா, என் நெஞ்சம் உம்மை நாடுகிறது!

கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச் செல்வது போல், இறைவா, நெஞ்சம் உம்மை ஆர்வத்துடன் நாடிச் செல்கிறது. இறைவன்மீது, உயிருள்ள இறைவன்மீது, என் உள்ளம் தாகங் கொண்டது; என்று செல்வேன்? இறைவனின் முகத்தை என்று காண்பேன்?

—சங். 42: 1, 2.

அருள் வாக்கு

"மனக்கசப்பு, சீற்றம், சினம், வீண் கூச்சல், பழிச்சொல் ஆகிய அனைத்தும் உங்களை விட்டொழியட்டும்"

— எபே. 4 : 31.

உதயதாரகை

# குடும்பம் சிறந்தால் சமுதாயம் சிறக்கும்

யாழ். மறை மாவட்டத்தின் கிறிஸ்தவ குடும்பவிழா, இம் மாதம் பத்தொன்பதாம் நாள், நவாலிச் சபை ஆலயத்தில் கொண்டாடப்படும். இன்றைய திருச்சபையில், கிறிஸ்தவ குடும்பங்கள் ஆற்றவேண்டிய முக்கிய பணிகளை விளக்குமுகமாக, கிறிஸ்தவ குடும்ப வார நிகழ்ச்சிகளும், மேற்படி விழாவின் மையக் கருத்தும் அமைய வேண்டுமென்ற நோக்குடன், ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்ததே சமுதாயம். ஆகவே, குடும்பங்கள் எத்தகையதோ, அத்தகையதாகவே சமுதாயமும் அமையும். முறைகேடான குடும்பங்களே, சமுதாயத்தின் அவல நிலைக்கு அடிப்படைக் காரணம். குவலயத்தைச் சீர்படுத்த, முதலில் குடும்பத்தைச் சீர்படுத்தவேண்டும். 'குடி உயரக் கோன் உயரும்' என்பது முதுமொழி இது திருச்சபையின் வாழ்விற்கும் பொருந்தும். இன்றைய சூழ்நிலையில் திருச்சபை வலிமைகுன்றி செயலாற்ற முடியாதிருப்பதின் முக்கிய காரணம், நமது குடும்பங்கள், கிறிஸ்துவின் குடும்பங்களாக இயங்காததே என்பது மிகையாகாது.

இன்று பல குடும்பங்கள், கிறிஸ்துவே தம் குடும்பத்தின் தலைவரென உதட்டளவில் மட்டுமே அறிக்கை செய்து, நடைமுறையில் கிறிஸ்துவுக்குப் புறம்பான காரியங்களையே செய்து, உலகமே தஞ்சமென வாழ்கின்றன. நமது குடும்பங்கள் சீரடைந்தால்தான், நமது சபைகளும் வலிமை பெற்று இயங்க முடியும். கிறிஸ்தவ குடும்பத்தின் முக்கிய பணி, கிறிஸ்துவை அறிவித்தலே. சமுதாயத்தின் பல்வேறு நிலையினர்க்கும் நற்செய்தி அறிவித்தலும், தனது செல்வாக்கினால் மனுக்குலத்தை உருமாற்றிப் புதுப்பித்தலுமே கிறிஸ்தவ குடும்பத்தின் பணியாகும்.

குடும்பம் சிறந்தால் சமுதாயம் சிறக்கும், என்பது மறக்க முடியாத உண்மை. கிறிஸ்தவ குடும்பம் மனிதரைப் புனிதமாக்கும், தீயோரைத் தூயோராக்கும், குவலயத்தை இறைவனின் கோவிலாக்கும் புனித ஆற்றலாய்ப், பல்கலைக் கழகமாய் விளங்கவேண்டும். தியாகம், அன்பு, ஒழுக்கம், கருணை, அறிவு, பொறுமை ஆகிய உயர்ந்த பண்புகளைப் பேணி வளர்க்கும் ஆலயமே குடும்பமாகும். கிறிஸ்தவ குடும்பம், சான்றோரை குணக்குன்றுகளை, ஒழுக்க சீலர்களை உற்பத்தி செய்யும் ஆலைமாயிருக்க வேண்டுமெனவே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உண்மையை உணர்ந்து, கிறிஸ்தவ குடும்பங்கள் தூய ஆவியானவரின் துணையுடன் தங்கள் சுகதுக்கங்களை ஒன்றாய் அனுபவித்தும், ஒருவரில் ஒருவர் அன்பு செய்தும், தம் குடும்ப பிரச்சனைகளை ஒன்றித்து இறைவனின் திருவடிகளில் வைத்து. அவர் காட்டும் வழியில் தீர்த்து வாழவேண்டும். 'ஒன்றாக விளையாடி ஒன்றாய்ச் செபிக்கும் குடும்பம், ஒன்றாய் வாழும்' என்று ஓர் அறிஞன் கூறியுள்ளார். இறைவனோடு நெருங்கி உறவாடுகின்ற குடும்பங்கள், எத்தகைய சூழ்நிலையிலும் தளர்ந்திடாது கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ முடியும்.

நல்ல குடும்பம், தான் மட்டும் இன்பம் அடைவதுடன் நின்று விடுவதில்லை. அறிவு பரப்பும் பள்ளிபோல், கல்வி பரப்பும் கல்லூரிபோல், பல்கலைகளையும் பயிற்றுவிக்கும் பல்கலைக் கழகம்போல், நன்னெறிகளை மற்றவர்க்குப் பரப்ப வேண்டும். குடும்பத்திலே கற்கவேண்டிய கலைகள் பல உள்ளன. நாட்டில் அன்பும், இன்பமும், பண்பும் பயனும் வளர வேண்டுமானால், நல்ல கிறிஸ்தவ குடும்பங்கள் பெருக வேண்டும்.

ஒரு குடும்பத்தின் உயிராகவும் ஒளியாகவும் விளங்குபவள் தாய். 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை........' என்பது முதுமொழி. இதனையுணர்ந்தே கிறிஸ்தவ குடும்பவார ஒழுங்குகளை நமது மறை மாவட்ட பெண்கள் ஒன்றியம் முன்னின்று செய்து வருகிறது. ஆகவே, இவ்வொழுங்குகள் சபைப் பெண்களுக்கே உரியதென ஒதுக்கிவிடாது, இவ்வார நிகழ்ச்சிகளில் குடும்பங்களாக ஈடுபடுவது நல்லது. இவ்வார நிகழ்ச்சிகளும், இறுதியில் நடைபெறும் விழாவும், நமது சபை வாழ்வில் குடும்பங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, இத்துறையில் வேறும் பல பயிற்சிக் கருத்தரங்குகளை நடத்தி உதவுவார்களென நம்புகிறோம்.

# கிறிஸ்தவ குடும்பம்

[ கருத்தரங்கிற்குரிய ஆலோசனைகள் ]

(முற்றொடர்)

## உண்மை நிகழ்ச்சி – 3

பிரேமா, தேவநேசன் ஆகிய இருவரும் திருச்சபை முறைப்படி திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணமான இரண்டு நாட்களுக்குள் தேவதாசனுக்குத் தன்னோடு குடும்ப வாழ்க்கை நடத்த விரும்பவில்லை எனப் பிரேமா உணர்ந்து கொண்டாள். தேவதாசனுக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு இருக்கக்கூடும் என்று அவள் நினைத்தாள். ஒரு நாள் அவள் வற்புறுத்திக் கேட்டதில், அவன் உண்மையை ஒத்துக் கொண்டான்.

ஆகவே, பிரேமா திருமணமான ஒரு வாரத்திற்குள், தன் பெற்றோரின் வீட்டிற்கு வந்து விட்டாள் இங்கு, அவள் கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியில் 7 ஆண்டுக்காலம் பணிபுரிந்தாள். பின்பு அவள் விவாகரத்து செய்து கொண்டாள். பிரேமாவின் வீட்டிற்கருகில் வாழ்ந்த தாமஸ் என்பவர், அவளது முழு விவரத்தையும் கேட்டுக்கொண்டு; அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினார். பிரேமாவோ, ஏற்கனவே திருமணத்தின் வாயிலாகத் தான் பெற்ற கெட்ட அனுபவத்தை நினைத்துத் திருமணம் செய்து கொள்ளத் தயங்கினாள். ஆயினும், இத்திருமணத்தை மற்றவர்களும் விரும்பியதால் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டாள்.

பிரேமா பணியாற்றி வரும் பள்ளிக்கூடத்தை நடத்திவரும் பிரிவினைச் சபையொன்றில் அவ்விருவரும் உறுப்பினர்களாயிருந்தனர். விவாகரத்திற்கு எவ்விதத்திலும் பிரேமா பொறுப்பல்ல என்பதை, இச்சபையினர் நன்கு அறிந்திருந்தும், இவர்களது திருமணத்தைச் செய்து வைக்க விரும்பவில்லை. பல ஆண்டுகள் ஆசிரியையாகப் பணியாற்றிய போதிலும், பிரேமா அப்பள்ளியிலிருந்து இராஜினமா செய்யும்படி கேட்கப்பட்டாள்.

### விவாகரத்து செய்து கொண்டவர்கள் மீது நாம் எத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்?

சில திருச்சபைகள் விவாகரத்து செய்து கொண்டவர்களை சபையிலிருந்து விலக்கி விடுவதுண்டு. இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் நம்முடைய மனப்பான்மை எப்படி இருக்க வேண்டும்? திருமணம், குழந்தைகளை வளர்த்தல் முதலியவற்றில் பெற்றோர்களுக்கு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அதிக அளவு தேவைப்படுகிறது. கணவன் அல்லது மனைவியின் பெற்றோர்கள் தங்கியிருக்கக்கூடிய பெரிய குடும்பங்களில் சில பிரச்சனைகள் ஏற்படக்கூடும். கணவனும் மனைவியும் தங்களுக்கு முக்கிய கடமைகள் இருப்பதை உணரவேண்டும்.

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் ஒரே உடலாக இருக்கிறார்கள். ஆகவே, தாய் தந்தையரும் மற்ற உறவினர்களும் அவர்குடும்பத்தில் இருக்க வேண்டிய நிலையை எபே. 5 ; 31 தெளிவாகக் காட்டுகிறது. பெற்றோர்கள் தங்களுடன் வாழ்ந்த போதிலும், மனோதத்துவ ரீதியாகவும். உணர்ச்சி வழியாகவும், வேதாகமத்தின்படியும், கணவனும் மனைவியும் ஒன்று சேர்ந்து பிரச்சனைகளைத் தீர்ப்பதும், மகிழ்ச்சியில் பங் கொள்வதும் அவசியம் என்பதை அவர்கள் உணரவேண்டும். கணவனோ மனைவியோ தத்தம் பெற்றோரை தன் மனைவி அல்லது கணவனுக்கு மேலாக கருதக்கூடாது. பெற்றோரும் தம் பிள்ளைகளின் குடும்பங்களில் வாழ்ந்தாலும், அவர்களுடைய குடும்பப் பிரச்சனைகளில் தலையிடாது இருக்கவேண்டும். தேவைப்படும் போது மட்டும், வேண்டிய ஆலோசனைகளையும் உதவியையும் வழங்கலாம்.

### கேள்விகள்:

1. குடும்பத்தில் தாய் தந்தையரின் பங்கை நீர் எவ்விதத்தில் காண்கிறீர்?

2. பெற்றோர் தங்கள் பிள்ளைகள் மீது காட்டக்கூடிய மனப்பாங்கு என்ன?

3. அன்பு, மரியாதை, புரிந்து கொள்ளுதல் முதலிய பண்புகளைக் குடும்பங்களில் செயல்படுத்தக் கூடிய வழிமுறைகளைக் கூறுக.

4. விலகி இருந்ததோ, விவாகரத்தோ எப்பொழுதாவது அனுகூலமாயிருந்ததா?

5. எந்தச் சூழ்நிலையில் விலகியிருத்தலும், விவாகரத்தும் நியாயப்படுத்தப்படும்?

### செயல்படுத்துவதற்கான ஆலோசனைகள்:

1. விவாகரத்து பற்றியும், சொத்துரிமைபற்றிய சட்டங்களைப் பற்றியும் நன்றாகப் படிக்கவும்.

2. குடும்பத்திற்குள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்காகக் குடும்பக் குழுக்களைத் தோற்றுவிக்குமாறு, குழு அங்கத்தினர்களை ஊக்குவிக்கவும்.

3. ஆலயத்திற்குப் போவது' குடும்ப வழிபாடு நடத்துவது, பொழுது போக்கிற்காக வெளியில் செல்வது, விடுமுறை நாட்களைக் கழிப்பது போன்றவற்றைச் செய்யும்பொழுது, குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர்களும் ஒன்றாகச் செயல்படுதல் நலம்.

4. சீதன வழக்கத்தை எதிர்த்து, நீங்கள் வாழும் சமுதாயத்திலுள்ள பெண்கள் மத்தியில் ஓர் எதிர்ப்பு அணியை உருவாக்குதல்.

5. திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும், விவாகரத்து செய்யப்பட்டவர்களுக்கும் வேண்டிய புத்திமதிகளைக் கூறி, அவர்களை ஏற்ற முறையில் திரும்பவும் சபை ஐக்கியத்தில் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## அனைத்துலக சிறுவர் தின விழா

அனைத்துலக சிறுவர் தின விழா, இம்மாதம் 5ஆம் திகதி, மானிப்பாய் 'அருள் மனை' மண்டபத்தில், அருள்திரு. D. R. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. போதகரின் செபத்துடன் விழா தொடங்கிற்று. சிறுவர் இல்ல மேற்பார்வையாளர் திரு. அருள்குமார் அனைவரையும் வரவேற்றார். பிள்ளைகளின் நிகழ்ச்சி சிறப்பாக வழங்கப்பட்டது. சிறப்புப் பாடல்கள், பேச்சுக்கள், நாடகம் ஆகிய இடம் பெற்றன. யாழ். கல்லூரி ஆசிரியர் திரு. K. நிசைராசா சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அனைவரும் தேநீர் விருந்தில் கலந்து மகிழ்ந்தனர். போதகரின் செபத்துடன் விழா முடிவுற்றது.

சிறுகதை

# விவேகமுடைய பெண்

ஒரு நாட்டில், கொடூரமும் தந்திரமும் நிறைந்த ஓர் அரசன் இருந்தான், அவன் மக்களை மிகவும் துன்புறுத்தி வந்தான்; தாங்க முடியாத அளவில் வரி விதித்தான்; பயங்கரமான அடக்கு முறைகளை அமுலாக்கினன்.

ஒருநாள், அவன் புதிய கட்டளை ஒன்றைப் பிறப்பித்தான், 'அரசிடம் குடிமக்களின் பெயர்ப் பட்டியல் இருக்கிறது. அவர்களிடம் அரசன் மூன்று கேள்விகளைக் கேட்பான். சரியான விடை கூறுவோர் உயிரோடு வீடு திரும்பலாம்; தவருன விடை அளிப்போர் தூக்கிலிடப்படுவர்' என்று நாடு முழுவதும் அறிவித்தான்.

இதனைக் கேட்ட மக்கள் மிக்க கோபம் அடைந்தனர். ஆனால் அரசனுக்கு எல்லா அதிகாரமும் இருந்தது எனவே எல்லோரும் அரண்மனைக்குப் போகவேண்டியிருந்தது. எனவே, பலர் தூக்கிலிடப்பட்டனர்.

இறுதியாக ஒரு கிழவனின் முறை வந்தது. அவனும், அரசனின் கேள்விக்குப் பதில் கூறப் போகவேண்டும் அவனுக்கு ஒரே ஒரு பெண்ணைத் தவிர, உலகில் வேறு யாரும் கிடையாது. கிழவனுக்கு ஒரே பயம். அரசனிடம் போனுல், நிச்சயம் உயிருடன் திரும்ப முடியாது. தன் தகப்பனுரின் வேதனையைக் கண்ட அவன் மகள் — 'அப்பா, நீங்கள் வீட்டில் இருங்கள், நான் போய் அரசனின் கேள்விக்குப் பதில் கூறிவிட்டு வருகிறேன்' என்ருள்.

தன் கேள்விகளுக்குப் பதிலளிக்க ஒரு பெண் வருவதை அரசன் அனுமதிக்கமாட்டான் என அறிந்தும், தானே போவதென்று அவள் முடிவு செய்து விட்டாள். அரண்மனையை அடைந்ததும், "நீ ஏன் இங்கு வந்தாய்?" என்று கேட்டான் அரசன். அதற்கு அவள், 'மாண்புமிக்க அரசே, என் தந்தைக்கு உடல் நிலை சரியாயில்லை; எனவே, நான் வந்தேன்' என்ருள். அதற்கு, அரசன் உடன்பட்டுத் தன் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினன்.

'மிகவும் கூர்மையானது எது? மிகவும் வேகமானது எது? மிகவும் நியாயமானது எது?' என்று கேட்டான். 'மிகவும் கூர்மையானது காது; அதி வேகமானது கண்; மிக நியாயமானது, அனைவரும் அறிந்த உனது கோபம்' என்று சிரித்துக் கொண்டே அவள் கூறினுள்.

இவளின் விடைகளைக் கேட்ட அரசன், அவளை விட்டுவிடும்படி கட்டளையிட்டான். ஆயினும் மறுபடியும் அவளுடைய அறிவுக் கூர்மையைச் சோதித்து அறியப் போவதாகக் கூறினுன்.

அடுத்தநாள் இரண்டு பழைய மரப்பலகைகளை அனுப்பி அவற்றை அழகான உடைகளாகத் தைக்கும்படி அப்பெண்ணுக்குக் கட்டளையிட்டான் அரசன்.

அதற்கு அப்பெண், 'நான் அரசன் கூறியபடியே செய்கிறேன் ஆனுல், அதற்கு மிகவும் வலுவுள்ள நூல் தேவை. அந்த நூலை இந்தக் கற்களிலிருந்து அரசன் எனக்குச் செய்து தரட்டும்' என்று கூறி இரண்டு பெருங் கற்களை சேவகரிடம் கொடுத்து அனுப்பினுள்.

இவளின் விவேகத்தைக் கண்ட அரசன் ஆச்சரியமுற்றவனுய், மீண்டு ஒரு முறை இவளைச் சோதிக்க விரும்பினுன். அப்பெண்ணிடம் தன் சேவகர்மூலம் 15 முட்டைகளை அனுப்பி, 'அடுத்த நாள் காலைக்குள் அவற்றை குஞ்சு பொரிக்கச் செய்ய வேண்டும்' என்று கட்டளையிட்டான்.

இதைக் கண்ட அப்பெண், அரசனின் சேவகரிடம், கை நிறைய நெல்லைக் கொடுத்து, 'இதனை இன்றே விதைத்து, நாளை காலைக்குள் நெல்லைப் பயிரிட்டு, அறுவடை செய்து கொடுத்து அனுப்பச் சொல்; இல்லாவிட்டால் பசியினுல் குஞ்சுகள் இறந்து விடும்' என்ருள்.

இதனைக் கேட்டதும், தானே முட்டாள் என்பதை உணர்ந்த அரசன், அப்பெண்ணைக் கொல்லும் எண்ணத்தைக் கைவிட்டான். சில காலத்திற்குப் பின் அரசன் காலமானுன். அந்தப் பெண் ஒரு சிறந்த வீரனை மணந்து இன்பமாக வாழ்ந்தாள்.

("The Khan and the Wise Girl")
என்ற கதையின் தழுவல்

## சொல் சொல்லும் கதை

சில சொற்கள் உருவான வரலாறு, சுவையாக இருக்கிறது. இங்கு சில சொற்களை ஆராய்வாம்.

வெற்றிலை பாக்கை ஆங்கிலத்தில் 'பீட்டில்-நட்' (Betel-nut) என்று கூறுகிருர்கள். 'பீட்டில்' என்பது தனியான ஓர் ஆங்கிலச் சொல் அல்ல. இங்கிலாந்தில் வெற்றிலையும் பாக்கும் இல்லை. எனவே, முற்காலத்தில் ஆங்கிலேயர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த போது, 'வெற்றிலை' என்று உச்சரிக்கத் தெரியாமல், 'பெத்தலை', 'பெத்தல்', 'பித்தல்' என்று உச்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள். அந்தச் சிதைவுதான் இப்போது 'betel' என்று வழங்கப்படுகிறது. இன்றும் சில கிராம மக்கள் வெற்றிலையை, 'வெத்தலை', 'பெத்தலை' என்றுதான் உச்சரிக்கின்றனர். மலையாளத்தில் 'வெத்தலா' என்று கூறப்ப்டுகிறது.

அடுத்து, கைது செய்யப்படுவதை ஆங்கிலத்தில் 'அரெஸ்ட்' — (Arrest) என்று கூறப்படுகிறது 'அர்' (ar) என்ற இலத்தீன் மொழி உருபிற்கு நான்காம் வேற்றுமை உருபு — 'கு' அல்லவா? இனி, 'ரெஸ்ட்' (rest) என்ற சொல் 'ஓய்வு' என்ற பொருள் தரும். எனவே, 'அர் + ரெஸ்ட்' என்ருல் 'ஓய்வுக்கு' என்பதுதான் பொருள். ஆகவே, ஒருவன் 'அரெஸ்ட்' செய்யப்பட்டான் என்ருல், அவன் 'ஓய்வுக்கு' அனுப்பப்பட்டான் என்பதுதான் கருத்து. கைதிகள் எங்கு செல்லுகின்றனர்? ஓய்வுக்குத்தானே!

நமது ஆராதனைகளில் போதகர் 'ஆசீர்வாதம்' கொடுக்கிருர் அல்லவா? இந்தச் சொல்லின் கருத்தைக் கவனியுங்கள். இச்சொல்லை ஆங்கிலத்தில் 'பெனடிக்ஷன்' (Benediction) என்று கூறுகிருேம். 'டிக்ஷன்' என்ருல் 'சொல்' என்பது பொருள் ('டிக்ஷனரி' என்ற சொல்லைக் கவனியுங்கள்). 'பெனெ' (Bene) என்ருல் 'நல்ல' என்பது பொருள். எனவே, 'பெனடிக்ஷன்' என்ருல் 'நல்ல சொல்' என்பதுதான் கருத்து.

ஆங்கிலத்தில் 'benefit' என்று சொல்லப்படுவதும், மேற்குறிப்பிட்ட கருத்திலேயே உருவானது. Bene-fit என்ருல், 'நல்ல பொருத்தம்' என்பதுதான் பொருள். இலாபமானதை அல்லது பயன் அமைந்ததை 'நல்ல பொருத்தம்' என்று சொல்வது சரிதானே!

பலருடைய கண்களுக்கு வருகின்ற ஒரு நோயை 'கற்றாக்ட்' (Cataract) என்று கூறப்படுகிறது. இந்தச் சொல்லுக்கு 'நீர் விழ்ச்சி' என்பதுதான் பொருள். Cata என்பது, 'கீழே விழுதல்' என்ற கருத்துடையது. Cataract என்பது 'கீழே விழும் நீர்' அல்லது 'நீர்-வீழ்ச்சி' என்று சொல்லலாம். கண்ணில் நீர் வடிவதால் இந்தப் பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். ஆனுல், இந்த நோய்க்கு 'கண் படலம்' என்றுதான் தமிழில் கூறப்படுகிறது.

ஆண்டின் நான்காம் மாதத்தை ஆங்கிலத்தில் 'ஏப்பிரல்' என்று கூறுகிருேம். இந்தச் சொல் 'ஏப்பிரோ'—'ஏபர்டஸ்' என்ற சொற்களிலிருந்து வந்த சொல்லாகும். 'நான் திறக்கிறேன்' என்பதுதான் இதன் பொருள். பல நாடுகளில் ஏப்பிரல் மாதத்தில்தான் பூவின் அரும்பு திறந்து மலர்கிறது.

ஒரே சொல்லுக்கு இணையான பல சொற்கள் மொழிகளில் வழங்கப்படுகின்றன. உதாரணமாக சில சொற்களைக் கவனியுங்கள். 'சொல்' என்ற ஒரு சொல்லுக்கு நேர்ச்சொற்கள் பல தமிழில் இருக்கின்றன. அவையாவன: அசைப்பு, அறை, இசை, இசைப்பு, இயம், உரை, கரை, கிளவி, குயில், கூற்று, செப்பு, தோல், தோற்றம், நுவற்சி, நொடி, பகர்ச்சி, பணி, பயில், பறை, பனுவல், பாணி, பூசல், புகறல், பேச்சு, மறை, மாற்றம், மொழி, வாய்மை, விளம்பு, விளை — என்பவையே.

இவ்வாறு, ஒரு சொல்லுக்கு நேரான பல சொற்கள் இருப்பது எல்லா மொழிகளிலும் உண்டு. இவைகள் நேர்ச்சொற்களாயினும், ஒன்றுக்கும் பிரிதொன்றுக்கும் மிகச் சிறிய கருத்து வேறுபாடு இருக்கும். நேர்ச் சொற்களில் பல காலப் போக்கில் வழக்கில் இல்லாமல் அழிந்து விடுகின்றன. சில சொற்கள் வாழ்கின்றன.

— P. G. S.

## இல்லத்திற்கு இனியவை:

1. துணியில் ஏற்படும் கறைகள்

உங்கள் துணியில் காப்பி, டீ, பழரசம், தேன் முதலியவை ஊற்றப்பட்டால், கறைபட்ட இடம் உலரும் முன், கறையை அகற்ற வேண்டும். கறையை அகற்ருமல் துணியை அலசினுல், மஞ்ணிற அடையாளங்கள். அந்த இடங்களில் நிரந்தரமாகப் படிந்து விடும். ஆகவே, பழரசக்கறை படிந்தால் உடனே குளிர்ந்த நீரில் அலசவேண்டும், நாள்பட்டு விட்டால் மஞ்சள் நிறக்கறை அப்படியே படிந்துவிடும். கடினமான துணியாயிருந்தால், மூன்றடி உயரத்திலிருந்து அந்தக் கறையின் வழியே சுடுநீரை ஊற்ற வேண்டும். மற்ற கறைகளுக்கு சோப்பைத் தடவி 30 நிமிடங்கள் அப்படியே வைத்திருந்த பின்னர் குளிர்ந்த நீரில் அலசி எடுக்க வேண்டும்.

2. எனுமல் 'பேயிண்ட்' கறைகள்:

கறைபட்ட உடனே, டர்பன்டைன் அல்லது மண்ணெண்ணெயை அந்த இடத்தில் நன்ருகப் பூசி, பின் 'சோப்' தண்ணியில் அலசவேண்டும். இரவு முழுவதும் வெதுப்பான நீரில் ஊறவைத்து காலையில் அலசுவதும் நல்லது. டர்பெண்டைன் பூசுவதின் மூலம் வார்னிஷ் பெயின்ட் கறையை அகற்றிவிடலாம்.

3. ஐஸ்கிரீம், முட்டைக் கறைகள்:

மூன்று நிமிடம் வரை கறைபட்ட துணியை குளிர்ந்த நீரில் ஊறவைக்க வேண்டும். கறை போகாவிட்டால், கார்பன் டெட்ராகுளோரைடு, அல்லது ஹைட்ரஜன் பெராக்சைடு கொண்டு தொட்டெடுத்து, இத்திரவம் ஆவியான பின்னர் குளிர்ந்த நீரில் அலசி எடுக்கலாம்.

## உதிர்ந்த சந்திரன்

வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம்
 உதிர்ந்து விழுந்தது.
பூமியில் நின்றுகொண்டிருந்த
 ஒரு யோகி அதைப் பக்கத்தில்
 அழைத்தார்.
"நீ ஏன் பூமியில் விழுந்தாய்?"
 என்று கேட்டார்.
"வானத்திலிருக்க விரும்பவில்லை"
 என்றது நட்சத்திரம்.
"ஏன்?" என்று கேட்டார் யோகி.
நட்சத்திரம் சொன்னது:
 "நான் சந்திரனைப்போல் ஆக
 நினைத்தேன்; முடியவில்லை!
 அப்போ சந்திரனுவது என்னைப்
 போல் குறுகக்கூடாதா? என்று
 தவங்கிடந்தேன்; நடக்க
 வில்லை!
 எனக்கு ஆத்திரம் வந்தது.
 சந்திரன் உதிர்ந்து விழக்
 கூடாதா? என்று ஏங்கினேன்;
 பலிக்கவில்லை!
 சீ! இந்த வானத்தில் இருப்
 பதா என்று உதிர்ந்து விழுந்து
 விட்டேன்!"
உடனே யோகி சொன்னுர்:
 "பரவாயில்லை! நீ சந்திரனுக
 முடியாவிட்டாலும், உனக்குச்
 'சந்திர'னென்றே பெயர் வைக்
 கிறேன்!"
நட்சத்திரம் அமைதியடைந்தது.

— கவிஞர் கண்ணதாசன்.

மரணம்

## பியற்றிஸ் மனேன்மணி அழககோன்

தெல்லிப்பளைச் சபையைச் சேர்ந்தவரும், ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு, ஜோன் தம்பிராசா அவர்களின் மாமியாருமாகிய திருமதி B. M. அழககோன் கடந்த மாதம் 4ஆம் திகதி, தெல்லிப்பளையில் காலமானுர். இவரின் இறுதியாராதனை, கடந்த மாதம் 7ஆம் திகதி காலை 9-00 மணிக்கு, சபைப் போதகர் அருள்திரு. T. S. பிரேமராசா அவர்களால், வண. G. A. உவில்சிலோ அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. அருள் திரு. D. R. அம்பலவாணர் இரங்கலுரை வழங்கினுர்.

தெல்லிப்பளைச் சபைக் கல்லறைத் தோட்டத்தில் அன்றுரின் நல்லடக்க ஆராதனை வண. பிரேமராசா போதகரால் நடத்தப்பட்டது.

நினைவு கூரும் ஆராதனை

## திருமதி E. C. R. விஜயரத்னம்

காலஞ் சென்ற வண. S. P. விஜயரத்னம் அவர்களின் மனைவியும், உடுவிலில் வசிக்கும் திரு. ஜெபநாயகம் தம்பதிகளின் மாமியாருமாகிய காலஞ்சென்ற திருமதி இராசமணி விஜயரத்னம் அவர்களின் வாழ்வுக்காக நன்றி செலுத்தும் ஆராதனை, உடுவில் ஆலயத்தில் சபைப் போதகர் அருள்திரு. D. C. இரத்தினசிங்கம் அவர்களால் நடத்தப்பட்டது. யாழ். மறை மாவட்டத்தின் முன்னுள் பேராயர் அருள்மிகு. எஸ். குலேந்திரன் இரங்கலுரை வழங்கினுர். அருள்திரு. A. V. யேகராசன் அருளுரை ஆற்றினுர்.

## Jaffna College Alumni London Association

At an Alumni Association Meeting held in London recently the association was formally constituted and the following Executive Committee was elected. The Committee for 1985/86 is as follows :

*President* : Mr. S. Anandarajan

*Joint Secretaries* :

Dr. Preman Jayaratnam
Dr. S. Somasegaram

*Treasurer* :

Mr. R. S. Chandrarajan

*Committee Members* :

Mrs. R. Kulanayagam, Miss. Sharmini Jeevaratnam, Messrs. Mano Kadirgamar, A. Kulandra, C. Kathiresan, Michael Selvaratnam, A. S. Selvaratnam, C. Sivagurunathan, G. J. Gunasegaram, Senthilingam, W. R. V. Bonney, W. K. L. Jayasingham, Wesley Jeevaratnam, Drs. Poopalarajah, Chandra, Sethurajan & Yogarajah.

The alumni subscription is fixed at £5-00 and life subscription at £50-00; student subscription at £3-00. A Christmas get-together is planned in December and the Annual Meeting will be following. The alumni is also making provision for the supply of college ties.

---

*Cathedral Church, Vaddukoddai*

**Rajaratnam — Kadirgamar**

The marriage was solemnised at the Cathedral Church at Vaddukoddai on Saturday the 12th of October, 1985 of ***Lakshman*** son of the late Mr. Victor Rajaratnam, formerly of the staff of Jaffna Central College and of Mrs. M. Rajaratnam of 60, Rasavinthotam Road, Jaffna and ***Mallika***, daughter of Mr. A. Kadirgamar, Principal, Jaffna College and of Mrs. Kadirgamar of Vaddukoddai.

The Rt. Rev. D. J. Ambalavanar, Bishop of the JDCSI, officiated, assited by Rev. T. S. Premarajah and Rev. S. K. Kadirgamar (an uncle of the bride).

Rev. H. R. S. Jeyachandran of St. Peter's Jaffna preached the homily. Dev. Anandarajan, (a cousin of the bride) sang a Special Song in Tamil

A special feature of the Service was the rendering of some good classical Tamil songs by a trained choir, adding a rich flavour to the marriage ceremony.

The Service ended with Benediction pronounced by the Bishop followed by a Tamil Lyric by the Church choir.

---

## The National Meeting......

*( Continued from page 2 )*

normally. Secondly the variety of option available for these few days was mind boggling. And thirdly once the choices were made, the challenges for growth and understanding nurtured, prodded and perhaps even pressed many of us to new depths of faith. In a variety of ways we were asked to see life, to see the world with new perspective To put it all in a nutshell, the Meeting was a spiritually uplifiting new experience to many of us.

**Chandra Ambalavanar**

*(Concluded)*

## Winning Over Those We Differ From

**by J. K. K. Retnanandam**

(A call to all peace-loving people to act on the inspiring words of Martin Luther King — "The greatest tragedy of this period of social transition could be not the staaident clamour of the bad people but the appealin silence of good people.)

Of the two ways of winning over those who differ from us, we have been pursuing the path of coercion, force and violence. At long last a realisation of the realities of the critical condition in whieh the country is currently convulsing consequent on these measures have compelled a change of course and to turn to the civilised way of settling controversiel issues by discussion and dialogue, by an awareness that we have to make room for others too on life's road and by a give and take policy — thanks to the benevolent inflence to our good neighbour India.

In the context of such a welcome swing to sanity, it is all the more tragic that the senseless slaughter of precious lives and devasting destruction of properties should continue. Shakespere's lament "Oh judgement, though art fled to brutish beasts and men who their reason," seems most apt in this context Are those engaged in this continuing calamity insensitive to the sufferings of people and bereft of sense as to realise that a scorched-earth policy is suicidal? Must pride, prestige and prejudice continue to control the scene and racial rancour rule the mind? Don't the anguished cries of wives and children for their lost husbands / fathers or the woeful wails of parents for their children, lost or killed or taken for questioning, torture and incarceration or those who have trekked to refugee camps or flight to foreign lands, touch the heart strings of those wallowing in the mire of violence and struggling in the quicksands of warfare? Where have the much extrolled qualities of compassion pity-mercy gone? There seems no need at all for contiuing the carnage on the part of either of the combatants. For the militants can now have the satisfaction of having got the Government which evaded, dodged and hedged about the consent to consider the loud-standing grievences that have irked the Tamils, with no more fears of it going back on its word, with the guardian angel India watching, while the Government can be content with having been able to knock down the extreme stand of a seperate state. Thus there being neither victor nor vanquished and no question of who is right but what is right Why not wait for the outcome of the negotiations, to continue the struggles, if need be?

It is not within the competence of the writer to suggest details as to how best a just settlement could be reached except to draw attention to certain general principles pertaining to the peace process. The incontrovertible truth in the old maxim "If you want peace cultivate justice" should find pride of place To this may be added the advice that it is only on the abutments of truth and justice that the bridge to span the wide chasm between the estranged communities can be built-a lack of which has been the fount from which have flowed mounting misunderstandings to foul the fair relations that had earlier held them together and to have later plunged them into the vicious vortex of bloody strife. It should simulteneously be borne in mind that a generous redress of grievances from willing herrts covnts much more for stability and harmony than a niggardly one wrested from unwilling hearts, which may yield only temporary relief. Therefore, our aim should be to *clear misunderstandings* by cooling heated heads and to *change attitudes* by warming cold hearts.

Misunderstandings could stem from genuine inability to correctly assess a situation — a weakenss to which Jesus drew attention in these oft - quoted lines "You see the note in your brother s eye but not the beam in your own eye." The other form of misunderstanding is of the treacherous type that is induced by delibrate distortions, mischievous machinations, malicious, misinformation and wilful witholding of facts for securing selfish advantage. That our masses have succumed to this malicious malady is beyond dispute, but the victims are not so blameworthy propaganda as it is again a human frailty - a proneness to fall prey to propaganda. In the restrograde transformation of mass thinking so caused, which Radakrishnan refers to as "mental slums" lise the clue to the ethnic issues escalating to such heights. Consequently, the innate good qualities such as tolerance and benevolence have been usurped by their opposite qualities of and even school text books have had their share in this unhealthy metamorphosis leading stout support to Thomas Carlyle's cute observation. "Happy are those people whose annals have not gone into history books." Thus whoever, in whatever form, has been behind intensifying the communal cleavage and causing the calamities that came in their wake are answerable to their maker.

Attitudes can be altered by propaganda which is doubleedged in that it can be used for good or bad purposes. In the preceding paragraph has been highlighted the damage caused by its pernicious use. We are now reaping the harvest of what was sown in accordance with the scientific law of action and reaction, also know as Karma in spiritual language. Let us retrieve this position by using the other edge of propaganda possessing the potency for doing good. The same law will then operate to bear good fruits if we create a conciliatory climate to strengthen and consolidate the welcome move to talk things over. Let us move with the winds of change to bring together the estranged parties. Let us not delude ourselves into the misconception that everything will work out well once the political pact is signed. The agreement must be considered to be just a seed. For this seed to germinate and grow into a tree of understanding having under its shade diverse opinions and contrary views, the ground must be prepared. The first act should be to rid the soil of the rock and rubble of prejudices, suspicions and fears. Thereafter the soil must be watered with mutual understanding and fertilised with the manure of goodwill, magnanimity and such like qualities

*( to be continued )*

## Jaffna News in Brief

**Refugees** : Some 4000 refugees have arrived in Jaffna from Trincomalee according to official sources. More are coming in, by boats and have been registered in the 13 A. G. A.'s divisions in the Jaffna District. The 5000 who arrived in Mullaitive are also trickling in, into Jaffna. 39 of them arrived by bus on 15-10-85. In the Refugee Camp in the town, there are 259 Refugees, belonging to 60 families.

**A Panel Discussion** was held on October 2nd at the Jaffna YMCA Auditorium on the occasion of the 116-th Birth Anniversary of Mahatma Gandhi to give thought to the relevance of his ideals in the critical situation facing the Tamils in Sri Lanka today. Mr. K. Nesiah led the discussion. An account will appear in this columns, as soon as it is available.

**Prof. K. Sinnathamby**, the President of the Jaffna Citizen's Committee was informed by telephone by the Secretary to the Ministry of National Secretary on 15-10-85 about his appeintment as a member of the Cease-fire Monitoring Board. He left by special plane on the morning of 16-10-85 to attend the first meeting of the Board held on 16-10-85 at 11 p. m. at the Ministry Office.

**Seventyone Peradeniya University** Tamil Students left on Monday 14-10-85 in two special buses arranged for them by the G. A. Jaffna who also assured their security.

**Train Services** to Colombo resumed on Tuesday 15-10-86 after a lapse of nearly one and a half months. The last train from Colombo was on 27-9-85. The *Inter City* commenced operating on Friday 18-10-85.

**The Spate of Plunder and Robberies** has reached a new high in Jaffna, threatening to destory the people, already at the end of their tether. The *Eelanadu* has strongly condemned these incidents. Puttur Navakiri, Kaithady and Karainagar were villages most hit by this new "plague" In some villages, the youth have put road blocks and prevented vehicles going through the village as a mark of protest. The University Student's Association has appealed to the youth movements to come to the help of innocent villagers.

## Festival Focus

The Annual Festival of the Jaffna Diocese of the C. S. I· came off on Saturday the 5th of October. The Holy Communion Service was held at 8.30 a. m· at the Cathedral Church, Vaddukoddai. The Bishop, the Rt. Rev. D. J Ambalavanar was the Celebrant. The choral liturgy was used.

The Lessons were read by Mr. K. A. Sinnathamby, Miss C. V. Selliah and Rev. M. Devathason· The Litany of Thanksgiving was chanted by Rev. S. Manopavan·

Rev. T. S. Premarajah preached the Sermon on the text taken from the concluding chapter of the Acts of the Apostles, the closing verses:— "*And Paul dwelt twelve years in his own house...... preaching the kingdom of God...... with all confidence no man forbidding him.*" (Verses 30, 31)

The purport of the Sermon was that at a time of daunting hurdles in our political, social and economic life, in our land, the thought of the "undeterred gospel" has a relevance to the church which is called upon to continue its mission 'undeterred', standing by the oppressed people in their relentless struggle for greater justice and freedom·

After a short tea-break, the venue of the Festival shifted to Otley Hall, where on the ground floor, the Manipay Church Women's Guild, thoughtful of those who have to stand the strain of having to wait for a late lunch, provided the much needed snacks and ice-cream.

On the top floor, the Uduvil Girls College provided a sumptuous 'feast' of oriental music and Dancing to focus the attention, particularly of the youth on the need, as we reach the end of the millenium, to preserve our cultural heritage, at a time of great threat to our racial identity and integrity.

The Public Meeting which started soon after the cultural programme, was presided over by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar.

The speakers on the occasion were *Rev, Christo Roberts* of Navaly Church who spoke on the significance of the International Year of the Youth and its relevance to the life of the Church, *Dr. (Mrs.) Chandra Ambalavanar* of Green Hospital, Manipay who dwelt on the message of "The National Meeting of the United Presbyterian Women in U S" held at Indiana in July this year and *Mr. S Jebanesan* of Jaffna College who sought to give in his talk a picture of the Church of the 21st century and the changes and the challenges which the New Church will present to the youth in particular.

The emerging *trend* of the three addresses was clear It was not a grim reflection on our present unmitigated sufferings as a race or as a church but a glow into the future and a challenge to the youth on the character of the 'banner' they would carry with them into the portals of the 21st century which, in a preview, appears currently to take on some ominous shapes and forms, unless we act, and that from now.

*Rev. Christie Roberts* emphasised the point that the youtk which today constitutes 20 per cent of the world population can play a vital role in our society only by their active participation and involvement in the various opportunities afforded to them to make full use of their idealism and creativity. The 40th Anniversary of the UN this year should remind them that the UN was established for the same goals which the IYY proclaims — *Participation, Development* and *Peace* in a complex and contentions world.

*Dr. (Mrs.) C. Ambalavanar* while giving an account of the Indiana Assembly of 6000 women delegates from US and 75 international participants from 35 countries of the world, posed the question if our young educated women in our midst are matching the enthusiasm of those in Third World countries in the area of mission among the socially oppressed and economically poor in our societies.

An Ida Scudder or a Florence Nightingale or Madam Curie may not be a common place phenomenon. But at the same time, leadership among women should not mean only those who attain dizzy heights, but those who respond to the needs of specific social situations at a time of political crisis·

*Mr. S. Jebanesan* in his address referred particularly to the character of the New Church of the 21st century which is today taking shape, on the ashes of the old structures. At such a time as this we need youth who could see visions as the Haystack Group of five young men of Williamstown Mass· who in 1806 constituted the springboard for the formation in 1810 of the American Board of Commissioners for Foreign Missions (ABCFM)— the 175th Anniversary of which event we celebrate this year.

In this context, an event which took place at the Uduvil Church on the day following the Festival has a special relevance.

Thirty six youth were confirmed at the Uduvil Church on Sunday 6th of October 1985 by the Rt. Rev D J Ambalavanar, the Bishop of the Diocese.

The new recruits by and large were not from the 'established' Christian homes at Uduvil or from the 'established' Christian schools of the North.

Many of them were from the outskirts of the village, some from the 'settlements' around the Christa Seva Ashram, some from the 'Girls Home' at the Women's Centre, and some from the deep hinterlands who have had their Christian nurture at the various Evangelistic centres as Sathiapuram. Whole families joined the Church, the heads of which were skilled workmen in the village — carpenters, masons and mechanics.

It is not difficult to see that the pattern of the new Church coming up before our eyes will not be the same as the one we have been used to, for many years, a pattern revolving round 'the mission-compound', and its immediate environs.

The call of Mr. Jebanesan for more educated youth to see 'visions' of the New Church is a timely one.

The concluding comments of Bishop Ambalavanar at the Festival, touched on the core of the problem of the Christian concern for "Reconciliation" in Sri Lanka today.

The Bishop said that the Christian should display in our present political context, "a revolutionary patience" markedly different from the 'patience' synonymous with indifference or boredom or inactivity.

In the light of the Bishop's comments we are reminded of what the Archbishop of Canterbury is reported to have said in a newspaper interview that the Church in Britain today was in "critical solidarity" with the Government (*EPS*).

The challenge facing the Christian Church in Sri Lanka today, as Bishop Ambalavanar has implied in his comments at the Festival is how best we could, without absolutising the conflict, keep the struggle for social justice in creative tension.

These are some of the insights which we could glimpse in the five and a hour programme at the Vaddukoddai on October 5th — a programme which marked the 38th Annual Festival of the Diocese.

The following message from the Lambeth Conference Report has a special thrust in this context:—

"*Christ was incarnate in a particular place and at a particular time. In our own day as we seek the 'mind of Christ' we have to discern this in our own place and in our own time.*"

[This article is *not* exactly a Report of the JDCSI *Fetival* held on 5-10-85 at Vaddukoddai. What we find here are mostly comments on the programme of the Festival and on the addresses at the public meeting together with digressions relevant to the subject. - *Ed.*]

C. E. R.

### The Halley's Comet

The Halley's Comet which is making its 28th cruise in recorded history will be, it is learnt, "faintly visible" to the naked eye in December this year but "fairly bright", in March 1986. We are asked to look at the Northern sky in December and the Southern sky in March.

There is no danger in looking at the comet with the naked eye for, like the moon, the comet only reflects the sunlight.

*The Institute of Fundamental Studies (IFS)* is organising a 'Haley's Watch' in March at Ruhunu University.

### Church News in Brief

O *The Church of the Ascension, Bandarawela* celebrated its 75th Jubilee on the 29th of September this year. The Founder-Vicar of this Church was Rev. W. J. S. Waltham (1930—1937). Among others who had served as vicars in this Church were:— Dr. Issac Thambyah (1938 — 1939) and Rev. Joseph Sarvananthan (1971 — 1973).

O *Churches in the Batticaloa District* according to a report by a team comprising the Archdeacon of Nuwara Eliya, Rev. Harold Goodchild and Rev. Dilo Canagasaby, which visited Batticaloa, in the aftermath of the recent disturbances in the East, the situation there was "so tragic and the needs of the area so great and urgent that a quick response was called for".

The entire Navatkudah Congregation was in a Refugee Camp since all their huts were reduced to ashes. [We have taken these news item from the *Ceylon Churchman: July-Aug. 1985.*] We are also told by informed sources that the congregation at *Nilaveli largely* methodists (in the Trincomalee District) has suffered a similar fate.

O *Thh General Synod of the Church of England* has approved the ordination of women as deacons. The Church of England has currently about 350 deaconesses but until now they have been considered laity.

O "*No Spring without the cuckoo*". According to a news report in *EPS*, Margaret Thatcher, the British Prime Minister has told a Conservative Party Meeting in connection with recent Church statements on the UK situation: "you may have noticed recently the voices of some reverend and right reverend prelates have been heard in the land. I make no complaint about that. After all, it wouldn't be spring, would it, without the voice of the occasional cuckoo".

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. Q/J/29, News, 85.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri San-
muganatha Press Kankesanthurai Road, Jaffna on Friday, 18th October 1985
and published by Mr Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.